CABS,NAGERCOIL நிறுவனத்தார்க்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/6373/2022

**தீர்மானம் எண். 578 அனுமதிக்கப்பட்டது**

59. இம் மாநகராட்சிக்குட்பட்ட 52 வார்டு பகுதிகளிலும் உள்ள மழைநீர் வடிகால்களில் உள்ள மண்ணை அகற்றுதல், சாலை ஓர ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் சேதமடைந்து ஆபத்தான நிலையில் இருந்த பேருந்து நிறுத்துமிடம் (Bus shelter) இடித்து அகற்றுதல் போன்ற பணியினை 26.07.2022 முதல் 27.08.2022 வரைJCB இயந்திரத்தை பயன்படுத்தி பணி மேற்க்கொள்ளப்பட்டது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,71,853/–க்கு (ஒரு இலட்சத்தி எழுபத்தி ஒன்றாயிரத்தி எண்ணூற்றி ஐம்பத்தி மூன்று) அனுமதியும் மேற்படி பணியின் அவசியம் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் விதி எண் 15–ன் கீழ் இப்பணியினை பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.R.விஜயகுமார் என்பவர் மூலம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

அ.கு:– மன்றம் பதிவு செய்யலாம்

கோப்பு எண்: இ1/11028/2022

**தீர்மானம் எண். 579பதிவு செய்யப்பட்டது**

60. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் அரசாணை எண்.37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கு துறை நாள்.30.03.2012–ன் படி பாதாள சாக்கடை திட்டம் நாகர்கோவில் நகராட்சி (தற்போது மாநகராட்சி) –ல் அமல்படுத்துவது தொடர்பாக பாதாள சாக்கடை திட்டத்திற்கான உப விதிகளுக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.389 நாள் 29.06.2015–ல் அனுமதி வழங்கப்பட்டதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் ந.க.எண்.21343/2017/பா.சா.தி2 நாள்.31.01.2017–ல் கீழ்வரும் நிபந்தனைகளுடன் பொது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| கட்டிட பரப்பளவு சதுர அடியில் | குடியிருப்புகள் | | வணிகஉபயோகம் | |
|---|---|---|---|---|
| 500 சதுர அடி வரை | 80 | 5000 | 150 | 10000 |
| 501 முதல் 1200 சதுர அடி வரை | 90 | 7000 | 250 | 21000 |
| 1201முதல் 2400 சதுர அடி வரை | 100 | 9000 | 280 | 27000 |
| 2400 சதுர அடிக்கு மேல் | 110 | 12000 | 510 | 60000 |
| இணைப்பு கட்டணம் ரூ.100/– (அனைத்து வணிக கட்டிடங்களுக்கு) | | | | |

நிபந்தனைகள்

1. தற்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள உபவிதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ்மற்றும் ஆங்கிலம்) பிரசுரம் செய்யப்படவேண்டும்.
2. பிரசுரம் செய்யப்பட்ட மாவட்ட அரசிதழ்களின் நகல்கள் (மூன்று) இவ்வலுவலகத்திற்கு சமர்பிக்கப்படவேண்டும்.
3. இது குறித்து பொதுமக்களுக்கு கால அவகாசம் கொடுத்து தகவல் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
4. பயனாளிகளிடமிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள முன் வைப்புத்தொகைகளை வசூல் செய்ய துறை நடவடிக்கை எடுக்கவும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.
5. இறுதி ஒப்புதலுக்கு மாமன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலுடன் அரசிதழில் வெளியிடப்பட்ட துணை விதிகள் இரண்டு பிரதிகள் ( தமிழ் மற்றும் ஆங்கிலம்) அனுப்பி வைக்கவும்.
6. இறுதி அங்கீகாரம் பெற கருத்துரு அனுப்பும் பொழுது உயர் நீதிமன்ற ஆணை எண்.24403/2008 நாள். 20.11.2008 மற்றும் அரசாணை எண். 293 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.11.2010–ல் அறிவுறுத்தப்பட்டுள்ள வழி முறைகளை உள்ளடக்கி அனுப்புதல் வேண்டும்.

இணை இயக்குனர் (திட்டம் நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலகம் சென்னை க.எண். 21343/2022/இஏ1 நாள் 05.08.2022–ல் பாதாள சாக்கடை திட்ட உபவிதிகளுக்கு இறுதி அங்கீகாரம் வழங்க கருத்துரு சமர்பிக்க கேட்டுள்ளார். அதன் படி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பொது அங்கீகாரத்திற்கு இறுதி ஒப்புதல் பெற மாமன்ற அங்கீகாரத்திற்காக

அ.கு:–

அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/4596/2010

**தீர்மானம் எண். 580 அனுமதிக்கப்பட்டது**

61. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38–ல் பெருமாள் கோயில் தெருவில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் பதித்தல் வேலையினை தொடர்ந்து சாலை சேதமடைந்துள்ளதாகவும் அப்பகுதி பெருமாள் கோயில் தேர் திருவிழா நடைபெற இருப்பதால், மேற்படி சாலையினை விரைவாக சீரமைத்துத் தர அப்பகுதி மாமன்ற உறுப்பினர் திரு.வி.சுப்பிரமணியம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து மேற்படி சாலையில் சிமெண்ட் தளம் அமைக்க ஆகும் செலவீனம் ரூ.440000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:–

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகோரிடநடவடிக்கை தொடர்ந்ததையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்: இ1/10012/2022

**தீர்மானம் எண். 581 அனுமதிக்கப்பட்டது**

62. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்: 1,2,3,4,17,18,19,20,21,30,31 மற்றும் 32 ஆகிய மேற்கு மண்டத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகள், மின் மோட்டார்கள்,ஸ்டார்ட்டர்கள் போன்றவற்றல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டில் 25.08.2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T..தங்கபாண்டியன் ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 4.50%குறைவு (ரூ.2055312.00) |
| 2 | திரு.T.சோமசேகரன் ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 0.06% குறைவு (ரூ.2150881.00) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்த ஒப்பந்ததாரர் T.தங்கபாண்டியன் என்பவர் மதிப்பீட்டை விட 4.50%குறைத்து கொடுத்துள்ளமையால்,இதனை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:-

அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்: 38/ 2022- 2023

**தீர்மானம் எண். 582 அனுமதிக்கப்பட்டது**

63. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்கள்: 5,6,7,8,9,10, 11,12,13,14,15,16,22 மற்றும் 23 ஆகிய வடக்கு மண்டத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகள், மின் மோட்டார்கள்,ஸ்டார்ட்டர்கள் போன்றவற்றல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் 25.08.2022-ம் தேதிஒப்பந்தப்புள்ளிகள்பெறப்பட்டதில் அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.துரை ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 24.99% குறைவு (ரூ.1284353.47) |
| 2 | திரு.S.சுப்பையா ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 6.90% குறைவு (ரூ.1594178.00) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்த ஒப்பந்ததாரர் திரு.T.துரை என்பவர் மதிப்பீட்டை விட

24.99%குறைத்து கொடுத்துள்ளமையால்,இதனை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:–

அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்: 37/ 2022– 2023

**தீர்மானம் எண். 583 அனுமதிக்கப்பட்டது**

64. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்கள்: 24,25,26,27,28,29,38,39,40,41,42,47 மற்றும் 48 ஆகிய கிழக்கு மண்டத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகள், மின் மோட்டார்கள்,ஸ்டார்ட்டர்கள் போன்றவற்றல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் 25.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.தங்கபாண்டியன் ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 24.83% குறைவு (ரூ.1315490.33) |
| 2 | திரு.S.சுப்பையா ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 7.10% குறைவு (ரூ.1625954.25) |
| 3 | திரு.T.துரை ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 4.15% குறைவு (ரூ.1677505.00) |

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்த ஒப்பந்ததாரர் திரு.T.தங்கபாண்டியன் என்பவர் மதிப்பீட்டை விட 24.83%குறைத்து கொடுத்துள்ளமையால்,இதனை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:–

அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்: 35/ 2022– 2023

**தீர்மானம் எண். 584 அனுமதிக்கப்பட்டது**

65. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்கள்: 33,34,35,36,37, 43,44,45,46,49,50,51 மற்றும் 52 ஆகிய தெற்கு மண்டத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகள், மின் மோட்டார்கள்,ஸ்டார்ட்டர்கள் போன்றவற்றல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டில் 25.08.2022–ம் தேதிஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.துரை ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 6.53% குறைவு (ரூ.2004190.00) |
| 2 | திரு.T.சோமசேகரன் ஒப்பந்தக்காரர் | மதிப்பிட்டை விட 0.13% குறைவு (ரூ.2141519.00) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்த ஒப்பந்ததாரர் திரு.T.துரை என்பவர் மதிப்பீட்டை விட 6.53%குறைத்து கொடுத்துள்ளமையால் இதனை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:–

அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்: 36/ 2022– 2023

**தீர்மானம் எண். 585 அனுமதிக்கப்பட்டது**

66. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையம் அருகில் வீடற்றோருக்கு தங்கும் இல்லம் (Shelter for Homeless centre)அமைத்தல் பணிக்கு ரூ.50,00,000 மதிப்பீட்டில் (NUHM-2021-2022)–ன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள 22.07.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | திரு.P.C.ஆன்றனி மரிய கிரேட்டஸ் ஒப்பந்ததாரர் கண்டன் விளை | மதிப்பீட்டை விட 5.10% குறைவு ரூ.4155776.10/– |
| 2 | திரு.S.டேவிட் ஒப்பந்ததாரர் தேரிவிளை | மதிப்பீட்டை விட 0.28% குறைவு ரூ.4366746.00/– |
| 3 | திரு.R.B.ராகுல் ஒப்பந்ததாரர் பொன்னப்பநாடார் காலனி | மதிப்பீட்டை விட 4.50% அதிகம் ரூ.4576058.62/– |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்த ஒப்பந்ததாரர் திரு.P.C.ஆன்றனி மரிய கிரேட்டஸ் மதிப்பீட்டை விட 5.10% குறைத்து கொடுத்துள்ளமையால் கூடுதல் வைப்பு தொகை ரூ.87582/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: இ1/6520/2021

**தீர்மானம் எண். 586 அனுமதிக்கப்பட்டது**

67. இம்மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு மண்டலத்தில் உள்ள வார்டு எண்கள்.24,25,26,27,28,29,38,39,40,41,42,47 மற்றும் 48 ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் பொது குழாய்கள், வால்வுகள் மற்றும் பம்பிங் லைனில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு (2022–2023) ஆண்டிற்கு தயார்

செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22,50,000/- (ரூபாய் இருபத்தி இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) -க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:-

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: இ2/7228 /2022

**தீர்மானம் எண். 587 அனுமதிக்கப்பட்டது**

68. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு மண்டலத்தில் உள்ள வார்டு எண்கள்.5,6,7,8,9,10,11,12,13,14,15,16,22 மற்றும் 23 ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் பொது குழாய்கள், வால்வுகள் மற்றும் பம்பிங் லைனில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு (2022-2023) ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22,50,000/- (ரூபாய் இருபத்தி இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) -க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:-

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: இ2/7227/2022

**தீர்மானம் எண். 588 அனுமதிக்கப்பட்டது**

69. இம்மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு மண்டலத்தில் உள்ள வார்டு எண்கள்.33,34,35,36,37,43,44,45,46,49,50,51 மற்றும் 52 ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் பொது குழாய்கள், வால்வுகள் மற்றும் பம்பிங் லைனில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு (2022-2023) ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24,00,000/- (ரூபாய் இருபத்தி நான்கு லட்சம்) -க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:-

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: இ2/7225/2022

**தீர்மானம் எண். 589 அனுமதிக்கப்பட்டது**

70. இம்மாநகராட்சிக்குட்பட்ட மேற்கு மண்டலத்தில் உள்ள வார்டு எண்கள்.1,2,3,4,17,18,19,20,21,30,31 மற்றும் 32 ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் பொது குழாய்கள், வால்வுகள் மற்றும் பம்பிங் லைனில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு (2022-2023) ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24,00,000/- (ரூபாய் இருபத்தி நான்கு லட்சம்) -க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:-

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: இ2/7226/2022

**தீர்மானம் எண். 590 அனுமதிக்கப்பட்டது**

71. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.45–ல் தம்மத்துக்கோணத்தில் அமைந்துள்ள நியாய விலை கடையின் மேற்கூரையில் தண்ணீர் கசிவு உள்ளதால்மேற்கூரையில் தரை ஓடு பதிக்கவும், உடைந்துள்ள தரைத்தளத்தை புதுப்பித்து மராமத்து பணிகள் மேற்க்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.98–000/– க்கு (ரூபாய் தொண்ணனூற்றி எட்டாயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11473/2022

**தீர்மானம் எண். 591 அனுமதிக்கப்பட்டது**

72. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5–ல் உள்ள கட்டையன்விளை பஞ்ச பாண்டவர் கோயில் தெருவில் உள்ள குடிநீர் குழாயில் கழிவு நீர் கலப்பதை சரி சேய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11475/2022

**தீர்மானம் எண். 592 அனுமதிக்கப்பட்டது**

73. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 36–ல் உள்ள சரலூர் மெயின் ரோட்டில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் பக்கச்சுவர் உடைந்து சாலையின் விளிம்பு உடைந்து வாகன ஓட்டிகளுக்கு பெரிதும் இடையூறாக உள்ளதால் அச்சாலையினை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,97,000/– க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி தொண்ணுற்றி ஏழாயிரம்) மன்றத்தின் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11471/2022

**தீர்மானம் எண். 593 அனுமதிக்கப்பட்டது**

74. இம்மாநகராட்சியில் 15.08.2022 அன்று ஆகஸ்ட் 15 அன்று சுதந்திரதின 75–வது அமுத பெருவிழா சிறப்பாக கொண்டாட வேண்டியுள்ளதால் முன்னேற்பாடாக விழா மேடை அமைத்தல், பார்வையாளர்கள் இருக்கை அமைத்தல், ஒலி, ஒளி அமைத்தல், தரைவிரிப்பு சிற்றுண்டி அருந்த செயர் அமைத்தர் மற்றும் இதர பணிகள் மேற்க்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் வபிரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | திரு.M.முருகன்<br>18/2 மூவேந்தர் நகர்<br>கோணம் | ரூ. 38,750/– |
| 2 | ரஞ்சி குட்டி டெக்கரேஷன்ஸ் | ரூ. 41,200/– |
| 3 | SRM Sound<br>நாகர்கோவில் | ரூ. 44,840/– |

மேற்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.M.முருகன், 18/2 மூவேந்தர் நகர், கோணம் அஞ்சல் என்பவர் ரூ. 38,750/– க்கு (ரூபாய் முப்பத்தி எட்டாயிரத்தி எழுநூற்றி ஐம்பது மட்டும்) குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11472/2022

**தீர்மானம் எண். 594 அனுமதிக்கப்பட்டது**

75. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1–வது வகுப்பு முதல் 5–வது வகுப்பு வரை உள்ள அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு மாண்பு மிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் மூலம் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 16.09.2022 அன்று ஆரம்பிக்க உள்ளதால் இத்திட்டத்தினை துவக்கி வைக்க மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மாண்புமிகு மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு இத்திட்டத்தினை துவக்கி வைக்க செட்டிக்குளம் அரசு துவக்கப்பள்ளியில் வைத்து நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்ள வருகை தர இருப்பதால் விழா மேடை, ஒலி, ஒளி, தரைவிரிப்பு இருக்கை வசதி போன்ற அடிப்படை பணிகள் மேற்க்கொள்ள மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | M.R சவுண்ட்ஸ் சர்வீஸ்<br>பாறைக்கா மடைத்தெரு<br>ரயில்வே ரோடு, கோட்டார் | ரூ. 34,000/– |
| 2 | M.M.R ஒலி, ஒளி அமைப்பகம்<br>இருளப்பபுரம், வேதநகர்<br>நாகர்கோவில் | ரூ. 41,200/– |
| 3 | BMC ஏஜென்சீஸ் சவுண்ட்ஸ்<br>ரயில்வே ரோடு, கோட்டார் | ரூ. 36,600/– |

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M.R சவுண்ட்ஸ் சர்வீஸ், பாறைக்கா மடைத்தெரு, ரயில்வே ரோடு, கோட்டார் நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த விலைப்புள்ளி ரூ.34,000/– (ரூபாய் முப்பத்தி நான்காயிரம்) அனுமதிக்கவும் அவசரம் கருதி வேலை உத்தரவு வழங்கவும் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11476/2022

**தீர்மானம் எண். 595 அனுமதிக்கப்பட்டது**

76. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.43–ல் ஈத்தாமொழி ரோடு மேலமறவன் குடியிருப்பிலுள்ள மழைநீர் வடிகால் ஓடையின் ஒரு பகுதி முற்றிலும் சேதமடைந்துள்ளதால் அப்பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,20,000/– க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி இருபதாயிரம்) மன்றத்தின் அனுமதிக்காக.

அ.கு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11176/2022

**தீர்மானம் எண். 596 அனுமதிக்கப்பட்டது**

77. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47 முத்தாரம்மன் கோவில் அருகில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை பகுதியில் சிறுபாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.70,000/– க்கு மன்ற தீர்மானம் எண்.493 நாள் 30.08.2022–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பகுதியில் உள்ள Culvert நேராக அமைக்காமல் தெற்கு பக்கம் சாய்வாக அமைக்க வேண்டியுள்ளதால் தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு தொகை ரூ.98,000/– க்கு (ரூபாய் தொண்ணூற்றி எட்டாயிரம்) மன்றத்தின் அனுமதிக்காக.

அ.கு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/7121/2022

**தீர்மானம் எண். 597 அனுமதிக்கப்பட்டது**

78. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32–ல் வடக்கு கோணம் புனித அன்னாள்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அச்சாலையில் தார் தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/– க்கு (ரூபாய் ஐந்து லட்சம்) மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/10592/2022

**தீர்மானம் எண். 598 அனுமதிக்கப்பட்டது**

79. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35–ல் உள்ள கணபதி நகர் மேலத்தெரு பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரதான மற்றும் பகிர்மான குழாய் பதித்த தால் அச்சாலையில் பதிக்கப்பட்ட பேவர் பிளாக் சாலையின் ஒரு பகுதி முற்றும் சேதமடைந்து பாதசாரிகளுக்கும் , போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் அச்சாலையினை சரி செய்வதற்கு

தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,90,000/- க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம்) மன்றத்தின் அனுமதிக்காக.
அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11474/2022

**தீர்மானம் எண். 599 அனுமதிக்கப்பட்டது**

80. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-ல் குருசடி கூத்தன்காடு பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம் மூலம் பிரதான மற்றும் பகிர்மான குடிநீர் குழாய் பதித்தல் பணி நடைபெறும் கது ஏற்கனவே இருந்த பேவர்பிளாக் சாலை பல இடங்களில் சேதமடைந்து உள்ளதால் அச்சாலையினை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.94,000/- க்கு (ரூபாய் தொண்ணூற்றி நான்காயிரம்) மன்றத்தின் அனுமதிக்காக.
அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1/11015/2022

**தீர்மானம் எண். 600 அனுமதிக்கப்பட்டது**

81. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-ல் உள்ள சூரங்குடி சானல் கரையில் உள்ள சிறுபாலத்தின் பக்கச்சுவர் உடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதால் அதனை சரி செய்யவும் தொல்லவிளை அங்கன்வாடி மையத்தில் உள்ள குடிநீர் தொட்டி (Sintex Tank) உடைந்துள்ளதால் அதனை சரி செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.70000/-க்கு (ரூபாய் எழுபதாயிரம்) மாமன்றத்தின் அனுமதிக்காக.
அலுவலக குறிப்பு : - அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1 / 11630 / 2022

**தீர்மானம் எண். 601 அனுமதிக்கப்பட்டது**

82. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-ல் குருசடி சூசையப்பர் தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் வெளியே செல்ல முடியாமல் தெருவில் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் நீர் உறிஞ்சும் கிணறு (Soak-Pit) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.70000/-க்கு (ரூபாய் எழுபதாயிரம்) மன்றத்தின் அனுமதிக்காக.
அலுவலக குறிப்பு : - அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1 / 11175 / 2022

**தீர்மானம் எண். 602 அனுமதிக்கப்பட்டது**

83. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-ல் குருசடி வடக்கு தெருவிலுள்ள மழைநீர் வடிகால் ஓடை மிகவும் பழுதடைந்துள்ளதால் அச்சாலையில் புதியதாக மழைநீர் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3,50,000/-க்கு (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம்) மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு : – அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1 / 11312 / 2022

**தீர்மானம் எண். 603 அனுமதிக்கப்பட்டது**

84. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 ஆசாரிமார் வடக்கு தெரு, திலகர் தெரு, கீழத்தெரு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையில் சிறுபாலம் ரூ.50,000/– மதிப்பீட்டில் அமைக்கவும் மற்றும் திலகர் தெரு, கீழத்தெரு பகுதியில் Precast slab அமைக்கும் பணிக்கு பொது நிதியின் கீழ் 22.07.2022 (03.08.2022, Open) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு. V. வைகுண்டராஜன்<br>ஒப்பந்தக்காரர்<br>சரக்கல்விளை | மதிப்பீட்டைவிட 0.11 % குறைவு<br>(ரூ.48613.00) |

வரப்பெற்றுள்ள ஒரு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு. V. வைகுண்டராஜன் என்பவர் மதிப்பீட்டை விட 0.11 % குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு : – அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1 / 8023 / 2022

**தீர்மானம் எண். 604 அனுமதிக்கப்பட்டது**

85. நாகர்கோவில் மாநகராட்சியில் கீழ்கண்ட ஒப்பந்தக்காரர்களால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 5 % (Fixed Security Deposit) காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் உள்ளதால் தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு எண் | பில்லில் பிடித்தம் செய்த 5 % FSD தொகை |
|---|---|---|---|
| 1. | A. பாண்டியன் | 148/2014–2015 | 3925 |
| 2. | A. பாண்டியன் | 155/2014–2015 | 13500 |
| 3. | N. கண்ணன் | 402/2015–2016 | 75000 |
| 4. | R. ஜெயக்குமார் | 461/2015–2016 | 41559 |
| 5. | R. ஜெயக்குமார் | 282/2016–2017 | 35000 |
| 6. | R. ஜெயக்குமார் | 471/2015–2016 | 36000 |
| 7. | C. குமார் | 481/2015–2016 | 20005 |
| 8. | C. குமார் | 32/2015–2016 | 5963 |
| 9. | N. சதீஸ் | 121/2019–2020 | 7353 |

| | | | |
|---|---|---|---|
| 10. | N. சதீஸ் | 130/2019-2020 | 20089 |
| 11. | T. அசோக்குமார் | 09/2021-2022 | 3486 |
| 12. | M. எப்சிபாய் | 256/2016-2017 | 1068 |
| 13. | V. சுபிஷ் | 35/2020-2021 | 4750 |
| **மொத்தம்** | | | **267698** |

அலுவலக குறிப்பு : - அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1 / 7944 / 2022

**தீர்மானம் எண். 605 அனுமதிக்கப்பட்டது**

86. நாகர்கோவில் மாநகராட்சியில் கீழ்கண்ட ஒப்பந்தக்காரர்களால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 5% கூடுதல் வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் உள்ளதால் தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு எண் | பில்லில் பிடித்தம் செய்த 5 % FSD & ASD தொகை |
|---|---|---|---|
| 1. | K. செல்வன் | 469/2015-2016 | 2357 |
| 2. | V. ஜோசப் அருள்ராஜ் | 112/2019-2020 | 17186 |
| 3. | V. ஜோசப் அருள்ராஜ் | 146/2018-2019 | 11686 |
| 4. | V. ஜோசப் அருள்ராஜ் | 455/2019-2018 | 397278 |
| 5. | V. ஜோசப் அருள்ராஜ் | 509/2018-2019 | 60000 |
| **மொத்தம்** | | | **488507** |

அலுவலக குறிப்பு : - அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1 / 469 / 2022

**தீர்மானம் எண். 606 அனுமதிக்கப்பட்டது**

87. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் உள்ள தெலுங்கு செட்டித்தெரு மற்றும் திருவள்ளுவர் தெரு ஆகிய பகுதிகளிலுள்ள போர்வெல்லில் தண்ணீர் செல்லும் தொட்டியில் இருந்து வருகின்ற பைப்கள் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.33000/-க்கு (ரூபாய் முப்பத்தி மூன்றாயிரம்) மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு : - அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ2 / 11633 / 2022

**தீர்மானம் எண். 607 அனுமதிக்கப்பட்டது**

88. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16—ல் உள்ள கிறிஸ்து நகர் மெயின் ரோட்டில் ஹோலி கிராஸ் மருத்துவமனை, ஜெப்ரி மருத்துவமனை, S.P. ஸ்கேன் சென்டர், புனித அலோசியஸ் மேல்நிலைப்பள்ளி மற்றும் STS கான்வென்ட் பகுதிகளில் 4 எண்ணம் வேகத்தடைகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.91000/— (ரூபாய் தொண்ணூற்றி ஒன்றாயிரம்) மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு : — அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ1 / 11036 / 2022

**தீர்மானம் எண். 608 அனுமதிக்கப்பட்டது**

89. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.84 நாள்.14.10.2021—ன்படி நாகர்கோவில் மாநகராட்சியின் அருகமையிலுள்ள தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகள் இணைக்கப்பட்டு நாகர்கோவில் மாநகராட்சியின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து தெங்கம்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.329/2021/அ1 நாள்.11.01.2022 மற்றும் ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.477/2021/அ1 நாள்.11.01.2022—ன்படி முறையே தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகளில்பணியாற்றி வந்த பணியாளர்கள் நாகர்கோவில் மாநகராட்சியில் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணியாளர்கள் இம்மாநகராட்சியில் பணியாற்றி வருகின்றார்கள்.

தெங்கம்புதூர் பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் 2013—2014 ஆம் ஆண்டு முதல் கணினி இயக்குபவராக பணியாற்றி வந்த செல்வி. மா.ப.சுஜா என்பவருக்கு தெங்கம்புதூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.278 நாள்.29.06.2020—ல் 2020—2021—ம் ஆண்டு பொதுப்பணித்துறை Schedule of Rate—ன்படி Diploma படித்தவருக்கு நாளொன்றுக்கு ரூ.844/— வீதம் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ளதன்படி, செல்வி. மா. ப. சுஜா என்பவர் கணினியில் MCA பட்டம் பெற்றவர் எனவே அன்னாருக்கு ரூ.844/— வீதம் வழங்கும்பட்சத்தில் மாதம் ரூ.22,788/— அனுமதிக்கலாம். எனவே செல்வி மா. ப. சுஜா கணினி இயக்குபவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/— வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து2021—2022—ம் ஆண்டும் ஒப்பந்த பணியில் தொடர தெங்கம்புதூர் பேரூராட்சி தீர்மானம் எண்.361 நாள்.09.07.2021—ன்படிஅனுமதித்து அன்னார் ஒப்பந்த அடிப்படையில் ஊதியமாக ரூ.20,000/— தெங்கம்புதூர் பேரூராட்சியிலும், தொடர்ந்து 31.03.2022 வரை நாகர்கோவில் மாநகராட்சியிலும் பெற்று வந்துள்ளார்.

தெங்கம்புதூர் பேரூராட்சியில் செல்வி மா.ப.சுஜா கணினி இயக்குபவராக 8 வருடங்களுக்கு மேல் ஒப்பந்த ஊதியத்தியில் பணியாற்றி வந்துள்ள விபரம் கோப்புகளின் வழி தெரிய வருவதாலும், தனியார் 01.04.2022 முதல் நாகர்கோவில் மாநகராட்சியில் கணினி இயக்குபவராக பணியாற்றி வருவதலும், அன்னாரின் வாழ்வாதாரம் கருதியும் நகராட்சி நிர்வாக இயக்குனரகம் / அரசால் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வரை தனியரை தொடர்ந்து கணினி இயக்குபவராக பணியாற்றிட அனுமதிக்கவும், நாகர்கோவில் மாநகராட்சியில் இதே போன்று இதர பணியாளர்களுக்கு வழங்கப்படுவதை போலபிரதி மாதம் ரூ.20,000/- ஊதியத்தில் தொடர்ந்து தற்காலிகமாக பணியாற்றிட அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: 38/2022/E1

**தீர்மானம் எண். 609 அனுமதிக்கப்பட்டது**

90. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.84 நாள்.14.10.2021-ன்படி நாகர்கோவில் மாநகராட்சியின் அருகமையிலுள்ள தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகள் இணைக்கப்பட்டு நாகர்கோவில் மாநகராட்சியின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து தெங்கம்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.329/2021/அ1 நாள்.11.01.2022 மற்றும் ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.477/2021/அ1 நாள்.11.01.2022-ன்படி முறையே தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகளில்பணியாற்றி வந்த பணியாளர்கள் நாகர்கோவில் மாநகராட்சியில் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணியாளர்கள் இம்மாநகராட்சியில் பணியாற்றி வருகின்றார்கள்.

ஆளூர் பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில்2007-2008 ஆம் ஆண்டு முதல் கணினி இயக்குநராக பணியாற்றி வந்த திருமதி. M. நிஷா என்பவருக் ஆளூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.482 நாள்.28.07.2020-ல் 2020-2021-ம் ஆண்டு பொதுப்பணித்துறை Schedule of Rate-ன்படி Diploma படித்தவருக்கு நாளொன்றுக்கு ரூ.844/- வீதம் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ளதன்படி, திருமதி. M. நிஷா என்பவர் கணினியில் PGDCA பட்டம் பெற்றவர் எனவே அன்னாருக்கு ரூ.844/- வீதம் வழங்கும்பட்சத்தில் மாதம் ரூ.22,788/- அனுமதிக்கலாம். எனவேதிருமதி. M. நிஷா கணினி இயக்குபவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/- வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 2021-2022-ம் ஆண்டும் ஒப்பந்த பணியில் தொடர ஆளூர் பேரூராட்சி தீர்மானம் எண்.544 நாள்.08.02.2021-ன்படி அனுமதித்து அன்னார் ஒப்பந்த அடிப்படையில் ஊதியமாக ரூ.20,000/- ஆளூர்

பேரூராட்சியிலும், தொடர்ந்து 31.03.2022 வரை நாகர்கோவில் மாநகராட்சியிலும் பெற்று வந்துள்ளார்.

ஆளூர் பேரூராட்சியில் திருமதி. M. நிஷா கணினி இயக்குபவராக14 வருடங்களுக்கு மேல் ஒப்பந்த ஊதியத்தியில் பணியாற்றி வந்துள்ள விபரம் கோப்புகளின் வழி தெரிய வருவதாலும், தனியார் 01.04.2022 முதல் நாகர்கோவில் மாநகராட்சியில் கணினி இயக்குபவராக பணியாற்றி வருவதலும், அன்னாரின் வாழ்வாதாரம் கருதியும் நகராட்சி நிர்வாக இயக்குனரகம் / அரசால் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வரை தனியரை தொடர்ந்து கணினி இயக்குபவராக பணியாற்றிட அனுமதிக்கவும், நாகர்கோவில் மாநகராட்சியில் இதே போன்று இதர பணியாளர்களுக்கு வழங்கப்படுவதை போலபிரதி மாதம் ரூ.20,000/− ஊதியத்தில் தொடர்ந்து தற்காலிகமாக பணியாற்றிட அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:−</u>

அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: 38/2022/E1

**தீர்மானம் எண். 610 அனுமதிக்கப்பட்டது**

91. இம்மாநகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி (SDRF−2021−2022)−ன் கீழ் வார்டு எண்.31 நாகராஜா கோவில் சாலையில் தார்சாலை பராமரிப்பு பணிக்கு ரூ.10,80,000/−க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி 09.03.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு. C. சுகந்தன் என்பவருக்கு மாமன்ற தீர்மானம் எண்.305 நாள் 27.05.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் 24−வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ரோஸிட்டா என்பவரின் 05.09.2022−ம் தேதிய கடிதத்தில் 24−வது வார்டு நாகராஜா கோவில் மேலரதவீதியில் வெள்ள நிவாரண நிதியின் கீழ் சாலை போடுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த சாலை நன்றாக இருப்பதாலும் எனது வார்டில் மற்ற பகுதியில் சாலை போடுவதற்கு TWAD Board வேலை முடியாத காரணத்தினாலும் இந்த வேலையை 28−வது வார்டுக்கு ஒதுக்கீடு செய்யும் படி கோரியுள்ளார். மேலும் 28−வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. J.N. அனந்த லெட்சுமி என்பவரின் 06.09.2022−ம் தேதிய கடிதத்தில் 24−வது வார்டில் நாகராஜா கோவில் மேலரதவீதியில் வெள்ள நிவாரண நிதியில் அங்கு சாலை போடமுடியாத காரணத்தினால் அந்த வேலையை மாற்றம் செய்து 28−வது வார்டில் உள்ள பவுண்ட் ரோட்டில் செய்து தருமாறு கடிதம் கொடுத்துள்ளார் மற்றும் 27−வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. K. கோபால சுப்பிரமணியன் என்பவர் 22.09.2022−ம் தேதிய கடிதத்தில் தனது வார்டுக்குட்பட்ட அழகம்மன் குளம் (பறைக்கன்கால் பண்டு) அருகில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் போக்குவரத்து செய்வதற்கு சாலையை சீரமைத்து தருமாறு கடிதம்

கொடுத்துள்ளார். அதனை தொடர்ந்து இம்மாநகராட்சி உதவி பொறியாளர் அவர்களின் 20.09.2022–ம் தேதிய அறிக்கையில் வார்டு எண்.24–வது நாகராஜாகோவில் மேலரதவீதி (SDRF) திட்டத்தின் கீழ் பணி செய்வதற்கு மதிப்பீடு தயார் செய்து வேலை உத்தரவு வழங்கப்பட்டு வேலை ஆரம்பிக்காத நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட சாலை வேறு ஒரு மதிப்பீட்டில் Patch Work வேலை செய்து முடிக்கப்பட்டு நல்ல முறையில் இருப்பதால், வார்டு எண்.28–ல் பவுண்ட் சாலை மற்றும் வார்டு எண்.27–வது அழகம்மன் கோவில் தெப்பகுளம் பகுதியில் உள்ள சாலையினை சீரமைக்க மாமன்ற உறுப்பினர் கேட்டு கொண்டதின் அடிப்படையில் மேற்படி சாலை பணியினை இடமாற்றம் செய்திட அனுமதி வேண்டியும் ஏற்கனவே வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்து புதிய வேலை உத்தரவு வேண்டியும் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே உதவி பொறியாளரின் அறிக்கை படி வார்டு எண்.28–வது பவுண்ட் சாலை மற்றும் வார்டு எண்.27–வது அழகம்மன் கோவில் தெப்பகுளம் பகுதியில் உள்ள சாலையினை சீரமைக்கவும் மேற்படி இப்பணி அரசின் திட்டப்பணி என்பதால் திருத்திய மன்றப்பொருள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : – அனுமதிக்கலாம்

ம. எண்: 178/2021–2022

**தீர்மானம் எண். 611 அனுமதிக்கப்பட்டது**

92.. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33–ல் கூத்தன்காடு, கீழக்கோணம், தொல்லவிளை, குருசடி, மேலச்சூரன்குடி, Holy Cross College Road, காமராஜ் நகர், போன்ற பகுதிகளில் 60 எண்ணம் புதிய தெரு விளக்குகள் (14 எண்ணம் New Poles உட்பட) அமைப்பதற்கும் போக்குவரத்திற்கு இடையூறாக நிற்கும் 6 எண்ணம் மின் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு : – அனுமதிக்கலாம்

கோப்பு எண்: இ4 / 100 / 2022

**தீர்மானம் எண். 612 அனுமதிக்கப்பட்டது**

93. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் அருகில் மாநகராட்சி சுகாதார ஆய்வாளரின் அறையின் அருகாமையில் தொடர்ந்து பூட்டிய நிலையல் ஒரு அறை காலியாக உள்ளது என்றும், மேற்படி அறையினை மாநகராட்சிக்கு நிதிநிலையினை உயர்த்தும் வகையில் பொது ஏலம் அடிப்படையில் மாத வாடகைக்கு கொடுப்பதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர

நடவடிக்கை மேற்கொள்ளலாம் என வருவாய் ஆய்வாளர் அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி அறையினை கடையாகவோ அல்லது பொருள் பாதுகாப்பு அறையாகவோ மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் மாத வாடகை அடிப்படையில் கொடுப்பதற்கும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட ஒப்பந்தப்புள்ளி தயார் செய்திடவும், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், விளம்பரம் செய்யும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண் – 08849/2022/அ6

**தீர்மானம் எண். 613 அனுமதிக்கப்பட்டது**

94. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜர் 5 மாடி கட்டிடத்தில் மூன்றாம் தளத்தில் தெற்கு பக்கம் பெரிய மற்றும் சிறிய அறையினை 2013–ஆம் ஆண்டு முதல் திரு. P. ஜார்ஜ் பீட்டர் என்பவர் உரிமம் எடுத்து அனுபவித்த வந்த நிலையில் டிசம்பர் 2020–இல் மேற்படி அறையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்துவிட்டார். மேற்படி அறையினை மாமன்ற தீர்மான எண் 629, நாள் 31–12–2020–இன்படி மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு06–01–2021முதல் தொடர்ச்சியாக மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வந்தது. 25–08–2021 அன்று நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு. ஆனந்த் பொன்குமார் என்பவர் மாத வாடகையாக ரூ 9600/– என கோரியதன் அடிப்படையில் அன்னாருக்கு மாமன்ற தீர்மான எண் 425, நாள் 30–09–2021–இன்படி 01–10–2021 முதல் உரிமம் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

முன்னால் அனுபவதாரர் திரு. P. ஜார்ஜ் பீட்டர் என்பவர் 09–12–2020 தேதியிட்ட விண்ணப்பத்தில் மேற்படி அறைக்கு தான் வைப்புத் தொகையாக ரூ 1,50,000/– மற்றும் கூடுதல் வைப்புத் தொகையாக ரூ.85,950/– ஆக மொத்தம் ரூ.2,35,950/– செலுத்தியுள்ளதால் மேற்படி தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். அன்னாரின் பெயரில் ரூ 2,35,950/– இருப்பில் உள்ளது. மேலும் மேற்படி அறை அக்டோபர் 2021–இல் ஒப்படைப்பு செய்துள்ளதால் திரு. P. ஜார்ஜ் பீட்டர் என்பவர் செலுத்த வேண்டிய மாத வாடகை டிசம்பர் 2020 முதல் செப்டம்பர் 2021 முடிய தொகை ரூ.1,49,020/– செலுத்த வேண்டும்.

எனவே திரு. P. ஜார்ஜ் பீட்டர் என்பவர் செலுத்த வேண்டிய மாத வாடகை ரூ.1,49,020/–ஐ அன்னாரின் வைப்புத் தொகை ரூ.2,35,950/–இல் ஈடு செய்துவிட்டு மீதமுள்ள தொகைரூ.86,930/–ஐ திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண் – 11828/2020/அ6

**தீர்மானம் எண். 614 அனுமதிக்கப்பட்டது**

95. இம்மாநகராட்சி 24.27 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் சிறப்பு நிலை நகராட்சியாக இருந்த போது அயற்பணி அடிப்படையில் ஒரு நகர் சார் அளவர் நியமிக்கப்பட்டு நகராட்சி பகுதியில் அளவீடு பணிகள் செய்து வந்தார் பின்னர் 2011–ம் ஆண்டு அப்போதைய நகராட்சியின் அருகாமையில் உள்ள ஆசாரிபள்ளம் பேரூராட்சி, பெருவிளை, வடக்கு சூரங்குடி கரியமாணிக்கபுரம் மற்றும் காந்திபுரம் ஆகிய ஊராட்சிகளை இணைத்து நாகர்கோவில் மாநகராட்சியின் எல்லையினை விரிவாக்கம் செய்து 49.10 சதுர கிலோ மீட்டர் ஆக உயர்வு செய்யப்பட்டது. 01.03.2019 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ஆளூர் மற்றும் தெங்கம்புதூர் பேரூராட்சிகளை இணைத்து நாகர்கோவில் மாநகராட்சி தற்போது 61.35 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என 4 மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சியில் 24.27 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் நியமனம் செய்யப்பட்ட ஒரு நகரசார் ஆய்வர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். தற்போது 61.35 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு விரிவடைந்து உள்ளதால் அளவீடு செய்யும் பணிகள் அதிக அளவில் தேக்கம் அடைந்து வருகிறது. இதனால் ஆக்கிரமிப்புகள் கண்டறிவது மற்றும் அகற்றுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே இம்மாநகராட்சியின் மண்டலம் ஒன்றிற்கு ஒரு நகர்சார் அளவர் வீதம் நானகு மண்டலங்களுக்கு நான்கு நகர்சார் அளவர்களை அயற்பணி அடிப்படையில் இம்மாநகராட்சி பணிக்கு வழங்கிட கன்னியாகுமரி மாவட்ட நில அளவை துறையினை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண் – எப்1/11409/2022

**தீர்மானம் எண். 615 அனுமதிக்கப்பட்டது**